IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.414/2025

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | SUBASHINI |
| HUSBAND'S NAME | : | VELMURUGAN |
| VILLAGE | : | SERKADU |
| OCCUPATION | : | HOUSEWIFE |
| AGE | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 01st day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சேர்காடில் வசித்து வருகிறேன். தற்போது வேலைக்கு எதுவும் செல்லவில்லை. வீட்டுகுடித்தனம் நடத்தி வருகிறேன். நான் 12 ஆம் வகுப்புப வரை படித்துள்ளேன். தற்போது சமாதானம் ஆகிவிட்டேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் கணவர். சுமார் தேதி மாதம் ஞாபகமில்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பாக என் கணவர் என்னை துன்புறுத்தல் சம்மந்தமாக சத்துவாச்சாரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். பின்னர் மறுநாள் காட்பாடி நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக வந்து சென்றபோது அடையாளம் தெரியாத நபர் பதிவு எண் இல்லாத காரை ஓட்டி வந்து என் மீது ஏற்றுவது போல் வந்தார். அது சம்மந்தமாக புகார் மனு கொடுத்தேன். என் மீது காரை ஏற்ற வந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கும் என் கணவருக்கும் 2004 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றும் அதில் 3 பெண் குழந்தைகள் பிறந்தார்கள் என்றும், என் கணவர் ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்றும், என் கணவர் என்னை துன்புறுத்தியதால் நான் சேர்காட்டில் உள்ள என் பெற்றோர் வீட்டில் வசித்து வந்தேன் என்றும், அந்த இடத்திற்கும் என் கணவர் அடிக்கடி வந்து தகராறு செய்வார் என்றும், இதனால் வேலூர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு கொடுத்அதேன் என்றும், பின்னர் 07.07.2022 ஆம் தேதி கனம் காட்பாடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணைக்கு வந்து சென்ற போது ஆஜர் எதிரியான என் கணவர் TN23 CA7111 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிற SKODA காரில் என்னை கொலை செய்யும் நோக்கத்துடன் காரை ஏற்றி கொல்ல முயற்சித்தார் என்றும், அசிங்கமாக திட்டினார்

என்றும் , கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிடு்டு தற்போது ஆஜர் எதிரி என் கணவர் என்பதால் அவருடன் சமரசம் ஆகிவிட்டு எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.414/2025

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | BABU |
| FATHER'S NAME | : | GOVINDHAN |
| VILLAGE | : | SERKADU |
| OCCUPATION | : | FARMER |
| AGE | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 01st day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சேர்காடில் வசித்து வருகிறேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். அவர் என் உடன் பிறந்த தங்கை. ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் தங்கையின் கணவர். தேதி மாதம் ஞாபகமில்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் மாலை 04.00 மணியளவில் என் தங்கை அ.சா.1 கனம் காட்பாடி நீதிமன்றம் வந்து செல்லும்போதுஅடையாளம் தெரியாத தெரியாத நபர்கள்ு என் தங்கையின் மீது காரை ஏற்ற முயற்சித்தார்கள் என்று கேள்விப்பட்டேன். சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

என் தங்கைக்கும் ஆஜர் எதிரிக்கும் 2004 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது அதில் என் தங்கைக்கு 3 பெண் குழந்தைகள் பிறந்தார்கள் என்றும், என் தங்கையின் கணவர் ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்றும், என் தங்கை கணவர் என் தங்கையை அடித்து துன்புறுத்தியதால் என் தங்கை சேர்காட்டில் உள்ள எங்கள் வீட்டில் வசித்து வந்தார் என்றும், எங்கள் வீட்டிற்று ஆஜர் எதிரி அடிக்கடி வந்து தகராறு செய்வார் என்றும், இதனால் என் தங்கை எதிரி மீது வேலூர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு கொடுத்தார் என்றும், பின்னர் 07.07.2022 ஆம் தேதி கனம் காட்பாடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணைக்கு என் தங்கை, நானும் வந்து சென்ற போது ஆஜர் எதிரி TN23 CA7111 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிற SKODA காரில் இருசக்கர வாகனத்தில் ுவந்து கொண்டிருந்த என் மீதும் என் தங்கையின் மீதும் கொலை செய்யும் நோக்கத்துடன் காரை ஏற்றி கொல்ல முயற்சித்தார் என்றும், எங்களை அசிங்கமாக திட்டினார் என்றும் , கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், சம்பவம் தொடர்பாக என் தங்கை நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தார் என்றும், சம்பவத்தை நேரடியாக பார்த்தாக போலிசார்

விசாரணையில் சொல்லிவிடுட்டு தற்போது ஆஜர் எதிரி என் மைத்துனர் என்பதால் அவருடன் சமரசம் ஆகிவிட்டு எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 01.06.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.